

திருப்பூர் லட்சுமி நகர், குலாலர் திருமண மண்டபத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் சார்பில் மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி மற்றம் விற்பனையை வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், வடக்கு மாநகரச் செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் திறந்து வைத்து விற்பனையை துவக்கி வைத்தனர். இதில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலர் வே.அமுதவல்லி, கைத்தறி இயக்குநர் அ.சண்முகசுந்தரம், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.




கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மாநகரம் தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் தச்சநல்லூர் சாவடித்திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்வு மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என்.மாலை ராஜா தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி ஜெ.கிருஷ்ணமூர்த்திபங்கேற்று சிறப்புரை யாற்றினார்.உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான்,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன்,தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன்,மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ்,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க.மணி,பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம்,அன்டன் செல்லத்துரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### புதுவை தமிழ்ச்சங்கம் சார்பில்

# தி.மு.க. முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசுக்கு பாரதி பொற்பதக்கம்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா முன்னிலையில் முதல்வர் ந. ரங்கசாமி வழங்கி சிறப்புரை !

புதுச்சேரி, டிச. 30 -

புதுவை தமிழ்ச்சங்கம் சார்பில், திமுக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் சி.பி. திருநாவுக்கரசு அவர்களுக்கு பாரதி பொற்பதக்கம் விருதை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா முன்னிலையில் முதல்வர் ந. ரங்கசாமி வழங்கி சிறப்பி த்தார்.

புதுவை தமிழ்ச்சங்கத்தில் மகாகவி பாரதி விழா மற்றும் பாரதி பொற்பதக்கம் வழங்கும் விழா நேற்று மாலை தமிழ்ச்சங்கத்தில் நடந்தது. கூட்டத்திற்கு தமிழ்ச்சங்க தலைவர் கலைமாமணி முனைவர் வி. முத்து தலைமை வகித்தார். செயலாளர் சீனு. மோகன்தாசு வரவேற்று பேசினார்.

துணைத் தலைவர்கள் ஆதிகேசவன், திருநாவுக்கரசு, பொருளாளர் அருள்செல்வம், துணைச் செயலர் தினகரன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தமிழ்மாமணி புலவர் உசேன், கலைமாமணி எம்.எஸ். ராஜா, பொறிஞர் மு. சுரேசுகுமார், பாவலர் அ. சிவேந்திரன், பாவலர் ர. ஆனந்தராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வழக்கறிஞர் கோவிந்தராசு தலைமையில் ‘பெரிதினும் பெரிது கேள்’ என்ற தலைப்பில் பாவரங்கம் நடைபெற்றது.

விழாவில், புதுச்சேரி முதல்வர் ந. ரங்கசாமி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் சி.பி. திருநாவுக்கரசு அவர்களுக்கு ஒரு சவரன் எடையுள்ள பாரதி பொற்பதக்கத்தை வழங்கி வாழ்த்தி பேசினார். புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் பாராட்டுரை வழங்கினார்.

பாரதி பொற்பதக்கம் பெற்றுள்ள வழக்கறிஞர் சி.பி. திருநாவுக்கரசு தி.மு. கழகம் சார்பில், 2022-ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் தளபதி அவர்களின் திருக்கரங்களால் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து, திமுக பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவர் மு. வைத்தியநாதன், எம்.எல்.ஏ., திமுக மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்த விழாவில், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் பொறிஞர் மு. பாலசுப்ரமணியன், திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் சண். குமரவேல், பொதுக்குழு உறுப்பினர் எஸ். கோபால், வெ. இராமசாமி, ப. செல்வநாதன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் செ. நடராஜன், இரா. சக்திவேல், எல். மணிகண்டன், மாநில மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.பி. மணிமாறன், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ச. பரிமளம், தொமுச பேரவை சூ. அண்ணா அடைக்கலம், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ரா. சுமதி, சிறுபான்மையினர் நலப்பிரிவு அமைப்பாளர் முகம்மது ஹாலிது, வர்த்தகர் அணித் தலைவர் செல்வா, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவைத் தலைவர் புலவர் ப. கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் ஜெரால்டு, மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரெமிஎட்வின், மாணவர் அணி துணை அமைப்பாளர் கண்ணன், யோகேஷ், விமல், நரேந்திரன், இலக்கிய அணி துணை அமைப்பாளர் கலிமுல்லா, உருளையன்பேட்டை தொகுதி பொருளாளர் சசிகுமார் மற்றும் வழக்கறிஞர் சங்க நிர்வாகிகள், வழக்கறிஞர்கள், தமிழறிஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கள்ளக்குறிச்சியில் துணை முதல்வர் பிறந்த நாள் - இறகுப்பந்து போட்டி!

## அமைச்சர் சி.வெ.கணேசன் பரிசுத்தொகை - கோப்பை வழங்கினார்!

கள்ளக்குறிச்சி, டிச. 30 -

தமிழக துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி தி.மு.க. சார் சார்பில் கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற இறகுப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுத்தொகை மற்றும் கோப்பையை அமைச்சர் சி. வெ.கணேசன் வழங்கினார்.

கள்ளக்குறிச்சியில் தமிழ்நாடு துணை முதல்வர்,கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி அவர்களின் பிறந்தநாளையொட்டி தி.மு.க., சார்பில் இரட்டையர் பிரிவு இறகுப்பந்து போட்டி கடந்த 22.12.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது.

இப்போட்டியில் கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், சங்கராபுரம், திருக்கோவிலூார், கச்சிராயபாளையம் உட்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த அணிகள் பங்கேற்றன.

தொடர்ந்து போட்டியில் வெற்றி பெற்று, முதல் 4 இடங்களை பிடித்த அணிகளுக்கு பரிசுத் தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது,இந்த நிகழ்ச்சிக்கு அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமை தாங்கினார், எம்.எல்.ஏ.,க்கள் வசந்தம் க.கார்த்திகேயன், தா.உதயசூரியன், தே.மலையரசன் எம்.பி. முன்னிலை வகித்தனர், போட்டியில் வெற்றி பெற்று முதலிடம் பிடித்த உதயா, கவினாஸ் அணிக்கு ரூ.10 ஆயிரம் பரிசுத் தொகை மற்றும் கோப்பையை அமைச்சர் சி. வெ.கணேசன் வழங்கி கவுரவித்தார்.

அதேபோல், இரண்டாமிடம் பிடித்த மகேந்திரன், கார்த்திக் அணிக்கு ரூ.8 ஆயிரமும், மூன்றாமிடம் பிடித்த முகில், ஹரிஷ் அணிக்கு ரூ.6 ஆயிரமும், நான்காமிடம் பிடித்த செந்தில், ஆனந்த் அணிக்கு ரூ.4 ஆயிரம் பரிசுத்தொகையும், கோப்பையும் வழங்கப்பட்டது,

நிகழ்ச்சியில் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கண்ணதாசன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




புதுவை தமிழ்ச்சங்கம் சார்பில் தி.மு.க. முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசுக்கு பாரதி பொற்பதக்கம் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா முன்னிலையில் முதல்வர் ந. ரங்கசாமி வழங்கி சிறப்புரையாற்றினார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் வேப்பங்குடி ஊராட்சி இம்மனாம்பட்டி அரசு நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கான இடத்தை பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.


### 1989ஆம் ஆண்டு முதல் 35 ஆண்டுகளாக

# சின்னாளபட்டி பேரூராட்சி மக்கள் காட்டும் அன்புக்கு நன்றி!

## அமைச்சர் ஐ. பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், டிச.30-

1989ம் ஆண்டு முதல் இன்றுவரை 35 ஆண்டுகளாக சின்னாளபட்டி பேரூராட்சி மக்கள் காட்டும் அன்பு அளவில்லாதது சின்னாளபட்டி 3வது வார்டில் நடைபெற்ற நாடக மேடை திறப்பு விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி பெருமிதமாக பேசியதோடு 1989ம் வருடம் முதன் முதலாக ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்ட போது எனக்குஎதிராக போட்டியிட்ட வேட்பாளரின் உறவினர்களே எனக்கு வாக்களித்தது இன்று வரை மனதில் பசுமையாக இருக்கிறது என ஐ.பெரியசாமி உருக்கமாக பேசினார்.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, சின்னாளபட்டி பேரூராட்சி பகுதிக்கு உட்பட்ட 3வது வார்டு வடக்குத் தெரு காளியம்மன் கோவில் எதிரே ரூ.8லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய நாடக மேடை திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ராஜா தலைமை தாங்கினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பாஸ்கரன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, துணைச் செயலாளர் மார்கிரேட் மேரி, ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், பிள்ளை யார்நத்தம் முருகேசன், பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபாகனகராஜ், பேரூர் கழக செயலாளர் மோகன்ராஜ், முன்னாள் பேரூராட்சி மன்றத் துணைத்தலைவர் வி.கே.முருகன், முன்னாள் பேரூர் கழக செயலாளர் எம்.பி.தோப்புசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வார்டு உறுப்பினரும், பேரூராட்சி மன்றத்துணைத் தலைவருமான ஆனந்தி பாரதிராஜா வரவேற்று பேசினார்.

**அமைச்சர் ஐ. பெரியசாமி பேச்சு!**

விழாவில் நாடக மேடையை திறந்து வைத்து பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி 1989ம் ஆண்டு ஆத்தூர் தொகுதியில் நான் முதன் முதலாக போட்டியிட்டபோது எனக்கு சட்டமன்ற உறுப்பினர் அந்தஸ்தை வழங்கியவர்கள் சின்னாளபட்டி பேரூராட்சி பகுதி மக்கள். காரணம் என்னை எதிர்த்து போட்டியிட்ட(அதிமுக) வேட்பாளரின் உறவினர்கள் இப்பகுதியில் அதிகம் உள்ளனர். இருந்தும் அவர்கள் என்னை நம்பி என் மீது அளவில்லாத பாசம் கொண்டு எனக்கு வாக்களித்தார்கள். அதை நான் என்றும் மறக்க மாட்டேன் இதுபோலத்தான் ஆத்தூர் தொகுதி முழுவதும் தொகுதி மக்கள் என்மீது அளவில்லாத பாசம் கொண்டு தொடர்ந்து ஒவ்வொரு தேர்தலிலும் எனக்கு வாக்களித்து வருகிறார்கள். பணமா, பாசமா என்ற கேள்வி எழும்பிய போது பாசத்திற்கு கட்டுப்பட்டு வாக்களித்த மக்கள் ஆத்தூர் தொகுதி மக்கள். உயிருள்ளவரை அவர்களுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

**இல்லங்கள் தேடி மருத்துவ வசதி**

சித்தையன்கோட்டை பகுதியில் இடப் பிரச்சனை ஏற்பட்ட திமுக ஆதரவாளராக இருந்தவரின் இடத்தை சுமார் 200 குடும்பங்களுக்கு வழங்கிய போது அவர் ஒருவர் தான் வருத்தப்பட்டார். ஆனால் 200 குடும்பங்களை சேர்ந்தவர்கள் மகிழ்ச்சியுடன் இன்றும் நமக்காக உறுதுணையாக உள்ளார்கள். அதுபோலத்தான் நமது கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் பாதிப்பிற்காக மற்றவர்களை நாம் பழி வாங்க கூடாது என்றார். தமிழகத்தில் உள்ள அனைவரும் சமம், எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையை உருவாக்கித் தந்த கழகத்தலைவர் ஸ்டாலின் அவர்களின் மக்களுக்கான ஆட்சியில் இல்லங்களை தேடி நலத்திட்டங்கள் வருவதோடு மருத்துவ வசதியும் வருகிறது.

இதை நாம் சரியான முறையில் பயன்படுத்தி உயர்நிலையை அடைய வேண்டும் என்றார். இந்த விழாவிற்கு வந்திருக்கும் பலர் திமுகவின் மூத்த உறுப்பினர்களாக இருந்தாலும் அவர்கள் கட்சிக்காக உழைத்த பணியையும், அவர்களின் அர்ப்பணிப்பையும் தி.மு.க. என்றும் மறக்காது. குறிப்பாக நான் என்றும் மறக்கமாட்டேன்.

அவர்களுக்கான நலத்திட்டங்களை தொடர்ந்து செய்வேன் என்றார்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் இரா. சக்திவேல், ஆத்தூர் வட்டாட்சியர் முத்து முருகன், சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் தனுஷ்கோடி, ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தட்சிணாமூர்த்தி, அருள்கலாவதி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், சின்னாளபட்டி பேரூர் கழக செயலாளர் மோகன்ராஜ், சின்னாள பட்டி பேரூர் கழக முன்னாள் செயலாளர்கள் அறிவழகன், எஸ். கே.துரை, பாலகிருஷ்ணன், முன்னாள் பேரூராட்சி மன்றத் துணைத்தலைவர் எம்.வி.முருகன், சின்னாள பட்டி பேரூர் கழக பொருளாளர் எஸ். ஆர்.முருகன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் காங்கேயன், ராஜ கணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், செயல் அலு வலர்கள் பட்டிவீரன்பட்டி கோபிநாத், சின்னாளபட்டி இளவரசி, பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் கணேசன், பேரூராட்சி அலுவலக அலுவலர்கள் கலைச்செல்வி, இராமமூர்த்தி, பொறியாளர் பிரிவைச் சேர்ந்த ஆறுமுகம், மின் பணியாளர் சரவண பாண்டியன், துப்புரவு மேற்பார்வையாளர் சரளா, ஒன்றிய பிரதிநிதிகள் வடக்குத் தெரு சந்திரன், தம்பித்துரை, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



கவிக்கோ அறக்கட்டளையும், வேலூர் தமிழியக்கமும் இணைந்து நடத்திய விழாவில், கழக இலக்கிய அணி மாநிலத் துணைத்தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தனுக்கு, பேராசிரியர் அப்துல்காதர், ஏர்வாடி இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட சான்றோர் பெருமக்கள் முன்னிலையில், தமிழ்நாட்டின் தலைசிறந்த விருதான கவிக்கோ அறக்கட்டளையின் ”கவிக்கோ விருது பொற்கிழி, பாராட்டுப் பட்டயத்தை, வேலூர் வி.ஐ.டி. வேந்தர், கல்விக்கோ ஜி.விசுவநாதன் வழங்கியபோது எடுத்த படம்.